# தோழர் பத்மநாபா
# 12வது நினைவு தினம்

தென்னாசியாவின் தலைசிறந்த சமூக ஜனநாயகவாதியும், மார்க்சியவாதியும், ஈழ விடுதலைப் போராட்ட இயக்க தலைவருமான தோழர் நாபா அவர்கள் படுகொலை செய்யப்பட்டு பன்னிரண்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

ஆனால் அவர் கண்ட கனவுகள் எமது சமுதாயத்தில் இன்னும் கனவுகளாகவே இருக்கின்றன. சிலவேளைகளில் அந்த கனவுகளை நனவாக்குவதற்கான பாதையில் இருந்து தடம் புரண்டு வெகுதூரம் சென்றுவிட்ட சமூக நிலைமைகளே இன்று காணப்படுகின்றன.

தமிழ் மக்களின் தேசிய விடுதலையுடன் ஏற்றத்தாழ்வற்ற சமூக அமைப்பு, தொழிலாளர், விவசாயிகள், சிற்றுடைமையாளர்கள், பெண்கள், மாணவர்கள், புத்திஜீவிகளின் கூட்டுத் தலைமை, பெண் விடுதலை, தீண்டாமை ஒழிப்பு, சர்வதேச ஒடுக்கப்பட்ட மக்களுடன் நட்புறவு, முற்போக்கு அரசுகளுடன் உறவு, சிங்கள, தமிழ், மலையக, முஸ்லீம் சாதாரண மக்களின் ஐக்கியம் இவைதான் இவர் கண்ட கனவுகள். இவற்றுக்காகத்தான் பாலஸ்தீனம், ஐரோப்பா, இந்தியா, வடக்கு – கிழக்கு, மலையகம், தென்னிலங்கையென தோழர் நாபா எட்டுத் திக்கும் ஒய்வின்றி பயணித்தார். அவரது 39வது அகவையில் அவரதும், பன்னிரு தோழர்களதும் படுகொலையுடன் அந்த ஓய்வொழிச்சல் இல்லா அர்ப்பண உணர்வு கொண்ட உழைப்பு ஓய்ந்தது.



தனது வாழ்வின் இந்த குறுகிய காலத்தில் அவரின் அனுபவங்கள் அனேகம். கட்சியின் சொல்லமுடியாத பொருளாதார வறுமையின் மத்தியில் "நோ புறொப்ளம்" என்று சொல்லிக் கொண்டு வேலை செய்தவர் அந்த மனிதர். தென்னிந்தியாவிலும் இலங்கையின் வடக்கு கிழக்கிலும், மலையகத்திலும் மிகச் சாமானிய மனிதர்களுடன் தோளோடு தோள் நின்று சமூக விடுதலை பெறுவதற்காக தோழர் நாபா உழைத்தார்.

புழுதிபடிந்த தாடியுடன் விடாமுயற்சியுடன் அந்த மெலிந்த தோற்றமுடைய அந்த இளைஞர் இடதுசாரிகள், முற்போக்காளர்கள், மனித உரிமைவாதிகள், பெண் உரிமை வாதிகள் என பலரையும் அணுகினார்.

இலங்கையில் மாத்திரமல்ல இந்தியாவிலும் அவர் அவ்வாறுதான். சென்னையிலிருந்து இராமநாதபுரம் போவதற்கிடையில் (500 க்கும் மேற்பட்ட கி.மீ) அவர் திருச்சி, மதுரை என எண்ணற்ற பெறுமதிமிக்க மனிதர்களை வீடுதேடிச் சென்று சந்தித்து விடுவார். சென்னையில் கல்விகற்ற பாலஸ்தீன விடுதலைக்கான பிரபல முன்னணியின் மாணவர் அமைப்பைச் சேர்ந்தோர், வாரத்தில் ஒரு தடவையாவது அவரை சந்திக்கத் தவறுவதில்லை.

இந்தியாவில் சமூக மாற்றத்தை விளைந்தவர்கள் தேசியவாதிகள், சுதந்திர போராட்ட வீரர்கள், தந்தை பெரியாரின் பாசறையில் வளர்ந்தவர்கள் என பலதரபட்டோருடனும் நெருங்கிய உறவைப் பேணினார்.

கியூபா புரட்சி தினமாக இருக்கட்டும், அக்டோபர் புரட்சி தினமாக இருக்கட்டும், மேதினமாக இருக்கட்டும், சர்வதேச தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தினங்களாக இருக்கட்டும் அனுபவம் வாய்ந்த புத்திஜீவி, சுதந்திரப் போராட்டகாரர், சமூக ஜனநாயக வாதி ஒருவரையோ, இருவரையோ பலரையோ அழைத்துவந்து தோழர்களுடன் கலந்துரையாடச் செய்வார். கலைஞர்கள், எழுத்தாளர்கள் அவர்களது நண்பர்களாக இருந்தார்கள்.

எப்போதும் அவர் அதிர்ந்து பேசுபவர் அல்ல. தேவையில்லாமல் அநாவசியமாக வார்த்தைகளைக் கொட்டமாட்டார்.

தான் கொண்ட கொள்கைமீது சமூகத்தின் எதிர்கால நல்வாழ்வின்மீது கேள்விக்கு இடமில்லாத விசுவாசமான பற்றுக் கொண்டிருந்தார்.

ஆனால் அதற்காக வரட்டுத்தனமானவராக, குருட்டு வழிபாட்டாளராக இருக்கவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எப் தலைமையில் மாகாண அரசு அமைந்தபோது அவர் கட்சியின் தீவிர செயற்பாட்டாளராகவே இருந்தார். இன்னும் நீண்ட தூரம் நாம் செல்ல வேண்டும் என்பதில் தெளிவாக இருந்தார். சக தமிழ் இயக்கங்கள், தலைவர்களுடன் அவர் நல்லுறவை பேணினார். நாபா நல்ல மனுஷன் என்று அவருடன் ஒத்துப் போகாதவர்கள்கூட கூறுவார்கள்.

அவர் தான் காதலித்த ஆனந்தியை திருமணம் செய்து ஒருவருடம்தான் ஆகியிருக்கும். அதற்குள் அவர் குரூரமாக இந்திய மண்ணில் கோடம்பாக்கத்தில் படுகொலை செய்யப்பட்டார்.

அந்தப் படுகொலை தமிழகத்தை மாத்திரமல்ல அகில இந்தியாவையும் உலுக்கியது. மானிட நெஞ்சங்களை அதிரவைத்தது. அவர் மேல் எத்தனை ஆயிரம் மக்கள் மதிப்பு வைத்திருந்தார்கள் என்பதற்கு அவருடைய இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான மக்களே சான்று. சென்னை துறைமுகத் தொழிலாளர்களும், ரயில்வே தொழிலாளர்களும் கூட இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் காலஞ் சென்ற பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் விடுத்த அனுதாபச் செய்தியில் எனது தாயார் இந்திரா காந்தி அவர்களும், பத்மநாபா அவர்களும் ஒரே இலட்சியங்களுக்காகவே போராடி மரணித்தனர் என்று குறிப்பிட்டிருந்தார்.

தோழர் நாபாவின் பரிமாணங்கள் எத்தகையவை என்பதற்கு இந்த வாக்கியங்கள் எடுத்துக் காட்டாக அமைகின்றன.

துரதிஷ்டம் என்னவென்றால் தோழர் நாபா போன்ற தலைவர் எமது சமூகத்திற்கு இல்லை என்பதே ஆகும். தீர்க்க தரிசனமும், தொலை நோக்கும் மிக்க அந்த தலைவரின் இழப்பு எமது சமூகத்தில் என்றோ ஒருநாள் உணரப்படும்.

தோழர் நாபாவுக்கும் மறைந்த தோழர்கள், போராளிகள், பொது மக்களுக்கும் எம் இதய அஞ்சலிகள்.

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி E. P. R. L. F**

# தியாகிகள் தினம் — யூன் 19

தியாகிகள் தினத்திலே நினைவு கூரப்படுபவர்களில் சுதந்திரத்திற்காகப் போராட புறப்பட்டு ஜனநாயகம் மறுக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்களும் அப்போராட்டத்தில் பேரினவாத ஒடுக்குமுறையாளர்களின் கைகளால் மரணித்தவர்களும் அடக்கம்.

ஒரு சமூகத்தில் அந்தச் சமூகத்திற்காகச் சேவை செய்யும், போராடும் உரிமையை யாரிடம் இருந்தும் யாரும் பறித்துவிட முடியாது. ஆனால் இங்கு பொது எதிரியாக இருந்த பேரினவாத அரசுக்கு அப்பால் சகோதர இயக்கம் என்று சொல்லப்பட்ட ஒன்று மற்றைய இயக்கங்களை அழிக்கும் வஞ்சக செயல் அரங்கேறியது.

இந்த துயரமான நிகழ்ச்சிப் போக்கு இருந்திருக்காவிட்டால் ஈழத் தமிழர்களுடைய போராட்டமும் உலகின் தலை சிறந்த போராட்டங்களின் வரலாற்றில் உன்னதமான இடத்தைப் பெற்றிருக்கும்.

ஏனெனில் உலகில் தேசிய விடுதலைக்கான போராட்டங்கள் யாவும் ஜனநாயகம், மனித உரிமைகளை, விழுமியங்களை உள்ளடக்கியதாக இருந்தன. அந்தப் போராட்டங்களை வழி நடத்தியவர்கள் அர்ப்பணிப்பு, தியாகம் ஆகியவற்றுடன் இலட்சியவாதிகளாகவும், தத்துவ அறிஞர்களாகவும், கவிஞர்களாகவும், தேடல் உள்ள மனிதர்களாகவும் இருந்தார்கள்.

சோவியத் யூனியனில் சமூக மாற்றத்தை விளைந்த லெனின் தலைமையிலான சோஷலிசப் புரட்சி இயக்கமோ, இந்தியாவில் மகாத்மா காந்தி தலைமையில்லான தேசிய விடுதலை இயக்கமோ, சமகாலத்தில் கியூபாவில் பிடல் கஸ்ரோ தலைமையில் நடைபெற்ற சமூக ஜனநாயக மாற்றங்களோ, அல்லது தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா தலைமையில் நடைபெற்ற கறுப்பின மக்களின் விடுதலையோ பொருள் பொதிந்ததாக அர்த்தம் கொண்டனவாக இருந்தன. மனித குலத்தின் மேம்பாடு என்பதும் இவை போன்ற போராட்டங்களில் அடையாளப்படுத்தப்பட்டது.

மனித குலம் யுகம் யுகமாக நடத்திவரும் போராட்டம் என்பது பின் தங்கியதிலிருந்து முன்னேறிய நிலையை நோக்கியது.

ஈழப் போராட்டத்தைப் பொறுத்தவரை அழிவை நோக்கிய, சமூகத்தை செல்லரித்துப் போகச் செய்யும் ஒரு போக்கே பிரதான ஓட்டமாக அமைந்தது.

போராட்டத்தினூடாக யாருக்கும் தலைவணங்காச் சமூகமாக, அடிமையாக மாறாத சமூகமாக ஈழத்தமிழர் சமூகம் வளர்ச்சியடைந்துள்ளது என்று யாராவது கூறுவார்களானால் அவர்கள் தங்களையும் ஏமாற்றி, மற்றவர்களையும் ஏமாற்றுகிறார்கள் என்றே பொருள்படும்.

இங்கு தலைநிமிர்ந்து நிற்பதாக கூறப்படும் சமூகம் அதன் கௌரவம் சுயமரியாதையின் பேரால் சமூகத்தினுள் ஆயுத வல்லமை பெற்ற ஒரு சக்திக்கு அடிமைபடுத்தப்பட்டுள்ளது, என்பதே உண்மையாகும். அந்த சக்தியின் விருப்பு வெறுப்புக்களே சமூகத்தின் விருப்பு வெறுப்புக்களாக காட்டப்படுகிறது.

எவ்வாறு அந்நிய ஒடுக்குமுறையாளர்கள் எமது மக்களால் சகிக்கப்பட முடியாதவர்களோ அதேபோல் நம்மவர்கள் என்ற தேசியவாத மூடுதிரைக்குள் மறைந்திருப்பவர்களின் அடக்குமுறைகளும் சகிக்க முடியாதனவாகும்.

விடுதலை என்பது மக்களினதும் தேசத்தினதும் அழிவிலிருந்து பெறப்படுவது என்ற பிழையான கருத்தியலே இங்கு ஆதிக்கம் பெற்றுள்ளது. இதனால் அழிவை வழிபடும் புதிய கலாச்சாரம் வளர்ச்சியடைந்துள்ளது. தூரத்தில் இருந்து கொண்டு அல்லது சமூகத்தின் வசதிபடைத்த தளத்தில் இருந்து கொண்டு ஏழை இளைஞர், யுவதிகள், சிறுவர், சிறுமியரின் அழிவை போற்றும், பாராட்டும் ஒரு குரூரமான சமூகப் பிரிவு உருவாகியுள்ளது.

தேசத்தின் கட்டமைப்பு சிதறி மக்களின் ஒரு கணிசமான பகுதியினர் இடம் பெயர்ந்து பாரம்பரிய பிரதேசங்களுக்கு வெளியேயும், வேறு நாடுகளிலும் அகதிகளாக வாழ்கின்றனர். யாரும் இங்கு திரும்பி வந்து வாழ்வதற்கான நம்பிக்கைகளைக் கொண்டிருக்கவில்லை. தமிழர்களின் மீதான தேசிய ஒடுக்குமுறை, உணர்வுபூர்வமானதாகவும், உணர்ச்சியூட்டுவதாகவும் இருப்பினும் சமூகத்தின் சகல நம்பிக்கைகளையும் சு[illegible]த்தெரியும் அரித்தழிக்கும் வேலைகள் உள்ளிருந்தே நடைபெற்று விட்டன.

வடக்கு கிழக்கில் எஞ்சியிருக்கும் தமிழர்களின் சனத்தொகையே அதற்குச் சான்று. கடந்த காலத்தில் தமிழ் சமூகம் கொண்டிருந்த தலைமைத்துவத்தினதும் இன்று எஞ்சியிருப்பவர்களின் ஆற்றலையும் ஒப்பிடும் போது கிடைக்கும் பெறுபேறு அதற்குச் சான்று.

தற்போதைய பாராளுமன்றத் தலைமை இதயசுத்தியிலிருந்து செயற்படுவது என்பதைவிட தனது பிழைப்பு என்பதிலிருந்தே செயற்படுகின்றது. எனவே அதன் உதட்டுக்கும் மனதுக்கும் இடையிலான சம்பந்தம் பாரிய இடைவெளி கொண்டதாக இருக்கின்றது.

இப்போது தலைவர்கள் என்று இருப்பவர்கள் ஜனநாயக விரோத படுகொலையில் தப்பிப் பிழைத்து அந்த ஜனநாயக விரோதபோக்கிற்கு அடிபணிந்ததால் தமது வாழ்க்கை காலத்தை நீடித்து இருப்பவர்கள்.

இவர்கள் சமூகத்திற்கு எவ்வளவு தூரம் நேர்மையாக இருப்பார்கள் என்பது சொல்லாமலே விளங்கும்.

படுகொலை செய்யப்பட்ட தமது தலைவர்களுக்கு சகாக்களுக்கு இரங்கல் தெரிவிப்பதில் கூட இவர்கள் எச்சரிக்கையாக இருக்கிறார்கள். எங்கே இதனைச் செய்து கடும் சீற்றத்துக்கு ஆளாகிவிடுவோமோ என்று மிக அவதானமாக இருக்கிறார்கள்.

போராட்டம் எங்கே தவறாக போனதென்றால் எங்கே சமூகத்தின் விடிவுக்காக போராடப் புறப்பட்டவர்கள் வேட்டையாடப் பட்டார்களோ அன்றே தடம் புரண்டு விட்டது.

அதே மனோபாவத்துடன் நடைபெற்ற ஏனைய சம்பவங்கள் வியத்தகு சாதனைகள் எதுவும் தமிழ் மக்களுக்கு விடுதலையை பெற்றுத் தராது என்பதே உண்மையாகும்.

நடந்தவற்றை மறப்போம். இனி நடக்கப் போவதைப் பார்ப்போம் என்பது ஒரு அப்பட்டமான சந்தர்ப்பவாத சமாதானப் பாசாங்காகும்.

நடந்த சம்பவங்களின் பாரதூரத்தை இந்த சமூகம் உணர்ந்து கொள்ளும் வரை அதற்காகப் போராட வேண்டிய கடப்பாடு ஜனநாயகவாதிகளுக்கு உண்டு.

தனிநபர் வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட ஒரு கட்டமைப்பு தேசிய விடுதலை இயக்கமாக மாத்திரமல்ல அது ஒரு மதமாகவும் கருதப்படுகிறது. ஒரு மூட நம்பிக்கையாக அது வளர்ச்சி பெற்றிருக்கிறது. சைவசமய கடவுள்களில் ஒரு பகுதியாக மாற்றும் முயற்சிகளும் நடைபெறுகின்றன.

எமது சமூகத்தில் பகுத்தறிவுள்ள நியாயபூர்வமாக சிந்திக்கின்ற எவரும் நடைபெற்ற படுகொலை பயங்கரங்களை எண்ணிப் பார்த்தேயாக வேண்டும்.

இவற்றை இடித்துரைப்பது எந்த வகையிலும் சமாதான முயற்சிகளுக்கு பங்கம் ஏற்படுத்தாது.

உண்மையான சமாதான முயற்சிகள் இவற்றையும் உள்ளடக்கியதே.

ஊமையாகிவிட்ட இந்த உண்மைகள் உரைக்கப்படாத விடத்து இங்கு ஒரு உண்மையான சுதந்திரம் தமிழ் மக்களுக்கு கிடைக்கும் என்பது பாமரத்தனமான கருத்தாகும்.

சுதந்திரப் போராட்டம் என்பது மொத்த சமூகத்தின் சுதந்திரம் மாத்திரமல்ல ஒவ்வொரு தனி மனிதனதும் சுதந்திரத்தையும் உள்ளடக்கும். தேசிய ஒடுக்கு முறைக்கெதிரான போராட்டம் ஜனநாயகத்திற்கானதே. அந்த ஜனநாயகத்திற்கான போராட்டம் அதற்காகப் போராடுபவர்களில் ஒரு பகுதியினரின் உரிமைகளை மறுப்பதாக இருக்கக் கூடாது.

கடந்த 20 வருடங்களில் தேசிய ஒடுக்கு முறைக்கு எதிராகவும் ஜனநாயகத்திற்காகவும் போராடி மரணித்த தோழர்கள், போராளிகள், மக்கள், எல்லோருக்கும் எமது இதயபூர்வமான அஞ்சலியை செலுத்துகிறோம்.

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி E. P. R. L. F**